தமிழ்நாட்டு ரயில்களில் ஏசி பெட்டிகள் அதிகரிப்பு!

இரண்டாம் வகுப்பு- முன் பதிவில்லா பெட்டிகள் குறைப்பு!

ஏழைகள் வயிற்றில் அடிக்கும் ரயில்வே துறை!

சென்னை, ஜூலை 6 –

நாட்டின் முக்கிய போக்குவரத்தாக விளங்கும் ரயில்வேயில், தினமும் கோடிக்கணக்கான பயணிகள் பயணித்து வருகின்றனர். மக்களின் வாழ்வோடு ஒன்றிய ரயில் போக்குவரத்தில், வசதி படைத்தவர்கள் முதல் அன்றாட வாழ்வு நடத்தும் நடுத்தர, ஏழைகள் வரை பயணிக்கின்றனர். அனைத்து தரப்பினருக்கும் ஏற்றார் போல், ரயில்களில் ஏசி பெட்டி, இரண்டாம் வகுப்பு முன்பதிவு படுக்கை வசதி பெட்டி, முன்பதிவில்லா பெட்டி என இருக்கிறது. இவற்றில் சமீபகாலமாக ரயில்வே நிர்வாகம், நீண்டதூரம் பயணிக்கும் ரயில்களில் வருவாயை அதிகளவு ஈட்டும் நோக்கில் ஏசி பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரித்து வருகிறது. இதற்காக இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி பெட்டிகளின் எண்ணிக்கையை குறைக்கின்றனர்.

இதற்கு பயணிகள் மத்தியில் எதிர்ப்பு இருக்கும் நிலையிலும், தொடர்ந்து முக்கிய வழித்தடங்களில் இயங்கும் ரயில்களில் 2 ஆம் வகுப்பு படுக்கை வசதி பெட்டிகளை குறைத்துவிட்டு, மூன்றடுக்கு ஏசி பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கின்றனர். இந்தவகையில் நேற்று தெற்கு ரயில்வே நிர்வாகம், தமிழ்நாடு, கேரளாவில் இருந்து நீண்டதூரத்திற்கு இயங்கும் 8 முக்கிய ரயில்களில் 2 ஆம் வகுப்பு படுக்கை வசதி பெட்டிகள் குறைக்கப்பட்டு, அதற்கு பதிலாக ஏசி பெட்டிகள் இணைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி, மன்னார்குடிபகத் கி கோதி எக்ஸ்பிரசில் (22674, 22673) வரும் 24 ஆம் தேதி முதல் 3 இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி பெட்டியும், ஒரு முன்பதிவில்லா பெட்டியும் நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக இரண்டடுக்கு ஏசி பெட்டி1, மூன்றடுக்கு ஏசி பெட்டி3 இணைக்கப்படுகிறது. ராமேஸ்வரம்ஓஹா எக்ஸ்பிரசில் (16733, 16734) வரும் 28ம் தேதி முதல் 5 இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி பெட்டியும், ஒரு முன்பதிவில்லா பெட்டியும் நீக்கப்பட்டு, அதற்கு பதிலாக 6 மூன்றடுக்கு ஏசி பெட்டிகள் இணைக்கப்படுகிறது.

திருவனந்தபுரம் மங்களூரு எக்ஸ்பிரசில் (16347, 16348) வரும் 25ம் தேதி முதல் ஒரு முன்பதிவில்லா பெட்டி நீக்கப்பட்டு, ஒரு மூன்றடுக்கு ஏசி பெட்டியும், மங்களூருலோக்மான்யதிலக் எக்ஸ்பிரசில் (12620, 12619) வரும் 26ம் தேதி முதல் ஒரு முன்பதிவில்லா பெட்டி நீக்கப்பட்டு, ஒரு மூன்றடுக்கு ஏசி பெட்டியும் இணைக்கப்படுகிறது.

கோவைராஜ்கோட் எக்ஸ்பிரசில் (16614, 16613) வரும் 30ம் தேதி முதல் 4 இரண்டாம் வகுப்பு பெட்டி நீக்கப்பட்டு, 4 மூன்றடுக்கு ஏசி பெட்டியும், கோவைராமேஸ்வரம் எக்ஸ்பிரசில் (16618, 16617) ஆகஸ்ட் 1ம் தேதி முதல் 4 இரண்டாம் வகுப்பு பெட்டி நீக்கப்பட்டு, 4 மூன்றடுக்கு ஏசி பெட்டியும், சென்னை எழும்பூர் ஜோத்பூர் எக்ஸ்பிரசில் (22663, 22664) வரும் 29ம் தேதி முதல் 5 இரண்டாம் வகுப்பு பெட்டியும், ஒரு முன்பதிவில்லா பெட்டியும் நீக்கப்பட்டு, 6 மூன்றடுக்கு ஏசி பெட்டிகள் இணைக்கப்படுகிறது.

சென்னை எழும்பூர்நாகர்கோவில் எக்ஸ்பிரசில் (12667, 12668) வரும் ஆகஸ்ட் 3ம் தேதி முதல் 5 இரண்டாம் வகுப்பு பெட்டியும், ஒரு முன்பதிவில்லா பெட்டியும் நீக்கப்பட்டு, 6 மூன்றடுக்கு ஏசி பெட்டிகள் இணைக்கப்படுகிறது. இப்படி 8 முக்கிய ரயில்களில் இரண்டாம் வகுப்பு படுக்கை வசதி பெட்டிகளும், முன்பதிவில்லா பெட்டிகளும் குறைக்கப்படுவதால், நடுத்தர மக்களின் பயணம் பாதிக்கப்படுகிறது.

ரயில் போக்குவரத்தை அதிகப்படியான மக்கள் விரும்பும் நிலையில், அவர்கள் பயணிக்க வசதியாக இருக்கும் 2ம் வகுப்பு படுக்கை வசதி பெட்டியை குறைப்பதன் மூலம் கடுமையான பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றனர். மூன்றடுக்கு ஏசி பெட்டியில் பயணிக்க வேண்டும் என்றால், வழக்கமாக செலுத்தும் கட்டணத்தில் இருந்து 3 மடங்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டிய நிலைக்கு ரயில்வே நிர்வாகம் தள்ளியுள்ளது. இப்படியே சென்றால், ரயில் பயணம் என்பது ஏழைகளுக்கு எட்டாக் கனியாகவே மாறிவிடும். லாப நோக்கில் இத்தகைய மாற்றத்தை ரயில்வே நிர்வாகம் செய்து வருவதற்கு பயணிகளும், ரயில்வே தொழிற்சங்கத்தினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

மூன்றடுக்கு ஏசி பெட்டியில் பயணிக்க வேண்டும் என்றால், வழக்கமாக செலுத்தும் கட்டணத்தில் இருந்து 3 மடங்கு அதிக கட்டணம் செலுத்த வேண்டிய நிலைக்கு ரயில்வே நிர்வாகம் தள்ளியுள்ளது. இப்படியே சென்றால், ரயில் பயணம் என்பது ஏழைகளுக்கு எட்டாக் கனியாகவே மாறிவிடும்.

லாப நோக்கில் இத்தகைய மாற்றத்தை ரயில்வே நிர்வாகம் செய்து வருவதற்கு பயணிகளும், ரயில்வே தொழிற்சங்கத்தினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே 8 ரயில்களில் மாற்றம்

தெற்கு ரயில்வே நிர்வாகம் கடந்த மாதம் 8 ரயில்களில் தலா ஒரு 2 ஆம் வகுப்பு படுக்கை வசதி பெட்டியை குறைத்துவிட்டு, அதற்கு பதிலாக தலா ஒரு மூன்றடுக்கு ஏசி பெட்டி இணைக்கப்படுவதாக அறிவித்தது. அதன்படி, மங்களூருதிருவனந்தபுரம் மாவேலி எக்ஸ்பிரஸ் (16603), திருவனந்தபுரம்மங்களூரு மாவேலி எக்ஸ்பிரஸ் (16604), மங்களூருசென்னை சென்ட்ரல் மெயில் (12602), சென்னை சென்ட்ரல்மங்களூரு வெஸ்ட் கோஸ்ட் எக்ஸ்பிரஸ் (22637), மங்களூரு சென்னை சென்ட்ரல் வெஸ்ட் கோஸ்ட் எக்ஸ்பிரஸ் (22638), சென்னை சென்ட்ரல்மங்களூரு மெயில் எக்ஸ்பிரஸ் (12601), மங்களூருதிருவனந்தபுரம் மலபார் எக்ஸ்பிரஸ் (16630), திருவனந்தபுரம்மங்களூரு மலபார் எக்ஸ்பிரஸ் (16629) ஆகிய 8 ரயில்களில் வரும் செப்டம்பர் மாதம் முதல் தலா ஒரு 2ம் வகுப்பு படுக்கை வசதி பெட்டி நீக்கப்பட்டு, ஒரு மூன்றடுக்கு ஏசி பெட்டி இணைக்கப்படவுள்ளது.

டிசம்பர் மாதத்திற்குள் – அனைத்து

சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகளை முடித்திடுவீர்!

அதிகாரிகளுக்கு அமைச்சர் – கா.ராமச்சந்திரன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை 6-

சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் விரைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளார்.

சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, ஆகியோர் முன்னிலையில் நேற்று (05.07.2023) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முதன்மை சுற்றுலா மையமாக முன்னேறி உள்ளது. தமிழ்நாட்டிற்கு ஆண்டு முழுவதும் அதிக சுற்றுலா பயணிகள் வருகை தரும் வகையில் முதலமைச்சர் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

சுற்றுலா பயணிகள் மற்றும் இளைஞர்களுக்கு சாகச அனுபவங்களை தரும் வகையில் ஊட்டி, தருமபுரி மாவட்டம் வத்தல்மலை, ஏலகிரி மலை உள்ளிட்ட பகுதிகளில் சாகச சுற்றுலா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பழம் பெருமை வாய்ந்த துறைமுக நகரான பூம்புகார் (காவிரிபூம்பட்டினம் பழைய பெயர்) நகரத்தில் பூம்புகார் கலைக்கூடத்தில் புனரமைப்பு பணிகள் மற்றும் சுற்றுலா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒகேனக்கல், பிச்சாவரம் ஆகிய சுற்றுலாத்தலங்களில் சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் சுற்றுலா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடிஅரித்ரா நதி தெப்பக்குளம், ஈரோடு மாவட்டம் அந்தியூர் பெரிய ஏரி ஆகிய இடங்களில் படகு குழாம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. முட்டுக்காடு படகு குழாமில் 200 நபர்கள் அமரும் வகையிலான இரண்டு அடுக்குகள் கொண்ட மிதவை உணவகக்கப்பல் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் படகுகுழாம்கள் அமைத்தல் உள்ளிட்ட சுற்றுலா மேம்பாட்டுத் திட்டப்பணிகள் அறிவிக்கப்பட்டு அதனை செயல்படுத்தும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

சுற்றுலா தலங்களில் வளர்ச்சித்திட்டப்பணிகளை மேற்கொள்ளும் போது வாகன நிறுத்தும் இடம், சுகாதார வளாகம் அமைத்தல் பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். பணிகள் குறித்த காலத்திற்குள் முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் சுற்றுலா அலுவலர்கள் பணியாற்றிட வேண்டும். அறிவிக்கப்பட்டுள்ள சுற்றுலா திட்டப் பணிகள் அனைத்தும் டிசம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு வரும் வகையில் விரைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.லி.பாரதிதேவி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக திட்ட பொறியாளர், உதவி செயற்பொறியாளர்கள் சுற்றுலாத்துறை உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுலா வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று (5.07.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை பெரிய தலைவலியை ஏற்படுத்தி உள்ளதால்

அக்கட்சிகளின் ஒற்றுமையை பிரித்துப் போடும் பணியை பா.ஜ.க. தொடங்கியுள்ளது!

‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜூலை 6-

எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை பா.ஜ.க.வுக்கு பெரிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளதால், அக்கட்சிகளின் ஒற்றுமையை பிரித்துப் போடும் பணியை பா.ஜ.க. தொடங்கியுள்ளது என தினகரன் நாளேடு 5.7.2023-ல் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

அத்தலையங்கம் வருமாறு :

2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலை முன்னிட்டு பீகார் மாநிலம் பாட்னாவில் 17 எதிர்க்கட்சிகள் கூடி ஆலோசனை நடத்தியது ஆளும் பா.ஜ.க. அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மகாராஷ்டிராவில் சரத்பவார் கட்சியை உடைத்திருப்பதும், அதை தொடர்ந்து பீகாரில் நிதிஷ்குமார் கட்சியை உடைக்க முயற்சி நடப்பதும் பா.ஜ.க.வின் பயத்தை நன்றாக வெளிக்காட்டி உள்ளது.

2014 மக்களவை தேர்தலில் 282 தொகுதிகள், 2019 மக்களவை தேர்தலில் 303 தொகுதிகளில் வென்று பா.ஜ.க. அபார சாதனை படைத்தது. மோடி புகழ் தான் இத்தனை மாபெரும் வெற்றிக்கு காரணம் என்று பா.ஜ.க. புளங்காங்கிதம் அடைந்திருந்தது. ஆனால் ஒவ்வொரு மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சி பலவீனம் அடைந்ததும், எதிர்க்கட்சிகளிடையே இருந்த மோதலும் தான் பா.ஜ.க. இத்தனை பெரிய வெற்றியை பெற்றதற்கு காரணம் என்பது அத்தனை எதிர்க்கட்சிகளுக்கும் இப்போது நன்றாக தெரிந்து விட்டது. சிபிஐ, அமலாக்கத்துறை, வருமானவரித்துறை மூலம் எதிர்க்கட்சி தலைவர்கள் ஒடுக்கப்படுவதும், மிரட்டப்படுவதும், ஏன் கட்சிகளை உடைக்கப் பயன்படுத்தப்படுவதையும் கண்டு அத்தனை பேரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அதனால் தான் பீகார் முதல்வர் நிதிஷ்குமார் தலைமையில் நடந்த கூட்டத்தில் ராகுல், மு.க.ஸ்டாலின், கெஜ்ரிவால், மம்தா, சரத்பவார் உள்பட அத்தனை தலைவர்களும் பங்கேற்றனர்.

ராகுல், கெஜ்ரிவால், மம்தா ஒரே இடத்தில் கூடமாட்டார்கள். அதுதான் நமக்கு சாதகம் என்று பா.ஜ இதுவரை நினைத்திருந்தது. ஆனால் அவர்கள் ஒன்று கூடியது மட்டுமல்ல; அடுத்த கூட்டம் பெங்களூரில் வரும் 17, 18 ஆம் தேதிகளில் நடக்கும் என்ற அறிவிப்பும் வெளிவந்துவிட்டது. இத்தனை வேகமாக எதிர்க்கட்சிகள் செயல்பட்டு வருவது பா.ஜவுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தி விட்டது. தொடர்ந்து 3வது முறையாக தேர்தலில் வெற்றி பெற்று சாதிக்க நினைக்கும் பா.ஜவுக்கு, எதிர்க்கட்சிகளின் இந்த ஒற்றுமை பெரிய தலைவலியை ஏற்படுத்தி இருக்கிறது. அதனால் எதிர்க்கட்சிகள் வலுவான மாநிலங்களில் அந்த கட்சிகளின் ஒற்றுமையை பிரித்துப்போடும் பணியை இப்போது பா.ஜ.க. தொடங்கி இருக்கிறது.

பாட்னா கூட்டம் முடிந்த உடனேயே பீகாரில் முன்னாள் முதல்வர் ஜிதன்ராம் மஞ்சி தலைமையிலான இந்துஸ்தானி அவாமி மோர்ச்சா கட்சியை நிதிஷ்குமார் தலைமையிலான மகாபந்தன் கூட்டணியில் இருந்து வெளியே கொண்டு வந்தார் அமித்ஷா. இப்போது மகாராஷ்டிராவில் தேசியவாத காங்கிரஸ் கட்சியை பிளவுபடுத்தி, சரத்பவாருக்கு எதிராக அவரது அண்ணன் மகன் அஜித் பவாரை கொண்டு வந்து துணை முதல்வர் பதவியை கொடுத்து அங்குள்ள எதிர்க்கட்சிகள் கூட்டணியை வலுவிழக்க செய்து இருக்கிறார்கள்.

ஏற்கனவே சிவசேனா கட்சியை உடைத்து வெளியே வந்த ஏக்நாத் ஷிண்டேவுக்கு அங்கு முதல்வர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இப்போது பா.ஜவின் கண் பீகார் மற்றும் உபி பக்கம் உள்ளது என்கிறார்கள். பீகாரில் நிதிஷ்குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம் கட்சியை உடைக்கும் பணியை பா.ஜ.க. முயற்சி செய்யலாம் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

இன்னும் மக்களவை தேர்தல் வரும் முன்பு எந்தெந்த மாநிலங்களில், எந்தெந்த கட்சியை உடைத்து பலவீனப்படுத்த பா.ஜ காத்திருக்கிறதோ தெரியவில்லை. இவை எல்லாவற்றிற்கும் முக்கிய காரணம் எதிர்க்கட்சிகள் ஒற்றுமை தான்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

தினகரன்

ஜூலை 5, 2023 புதன்கிழமை

பயந்துவிட்டதா பா.ஜ?

2024 ... ஆண்டு நடைபெற உள்ள மக்களவை தேர்தலை முன்னிட்டு பீகார் மாநிலம் பாட்னாவில் 17 எதிர்க்கட்சிகள் கூடி ஆலோசனை நடத்தியது ஆளும் பா.ஜ அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மகாராஷ்டிராவில் சரத்பவார் கட்சியை உடைத்திருப்பதும், அதை தொடர்ந்து பீகாரில் நிதிஷ்குமார் கட்சியை உடைக்க முயற்சி நடப்பதும் பா.ஜவின் பயத்தை நன்றாக வெளிக்காட்டி உள்ளது.

2014 மக்களவை தேர்தலில் 282 தொகுதிகள், 2019 மக்களவை தேர்தலில் 303 தொகுதிகளில் வென்று பா.ஜ.க. அபார சாதனை

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜி. சுகுமார் சுப்பிரமணியன்

ஜூலை 6 (2020)

பேரறிஞர் அண்ணா அவர்களுடன் நெருங்கி பழகிய கெங்காதரனின் மகனான இவர், இளமைக்காலம் முதலே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

காஞ்சிபுரம் மாவட்டப் பிரதிநிதி – ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டப் பொருளாளர் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அவைத்தலைவர், பொருளாளர் எனப் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

தனது குடும்பத்தில் நடைபெற்ற அனைத்து மண விழாக்களையும் சீர்திருத்தத் திருமணமாக முத்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் மற்றும் கழகத் தலைவர் ஆகியோரின் தலைமையில் நடத்தியவர். அத்துடன் தனது குடும்பத்தில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் தமிழ்ப் பெயரை சூட்டியவர்.

வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

2003ஆம் ஆண்டு தேர்தல் நிதி திரட்டும் பணியில் காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்நாட்டிலேயே முதல் மாவட்டமாக ஒரு கோடி ரூபாய் நிதியை வழங்கியதில் மாவட்டச் செயலாளருடன் இணைந்து மாவட்டப் பொருளாளராக பணியாற்றி பாராட்டைப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சென்னை வடக்கு - வழக்கறிஞர் என்.மருதுகணேஷ் தாயார் -

பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் திருமதி பார்வதி நாராயணசாமி மறைவு!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 6 -

சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி மாவட்ட அமைப்பாளர் என்.மருதுகணேஷின் தாயாரும் முன்னாள் பொதுக்குழு உறுப்பினரும் , முன்னாள் மாவட்ட மகளிர் அணி தலைவரும், சென்னை மாநகராட்சி 8 வது வார்டு முன்னாள் மாமன்ற உறுப்பினரும்,மொழிப்போர் தியாகியுமான, என்.பார்வதி என்கிற பார்வதி நாராயணசாமி (வயது70) அவர்கள் உடல் நலக்குறைவு காரணமாக நேற்று (5.7.2023)காலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரின் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தாம்பரம் வ. கன்னியப்பன்

ஜூலை 6 (2007)

தாம்பரம் நகரக் கழகச் செயலாளராக இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றியவர்.

தாம்பரம் நகர்மன்றத் தலைவராக ஐந்தாண்டுகள் பணியாற்றி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, கறுப்புக் கொடி மற்றும் கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.